**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)**
**மாதிரிப் பரீட்சை - V 2018**

| வரலாறு II | 33 | T | II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|

- ❖ **பகுதி 1 இன் முதலாம் வினா கட்டாயமானது.**
- ❖ **பகுதி II இலிருந்து நான்கு வினக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**
- ❖ **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

1. (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) களனிகங்கை, ஆனைக்கோட்டை, நுவரவாவி, பப்பதன்னகால்வாய், கொத்மலைநீர்த்தேக்கம், கோட்டை, பெட்றிக்கோட்டை, கல்சொகன், கும்புகன் ஓயா, பண்டுவஸ்நுவர, தந்துரே, காலி (12 புள்ளி)

(ii) வத்திக்கான், மத்தியதரைக்கடல், ஜேர்மனி, லிஸ்பன், கல்கத்தா, போரோபுதூர் (06 புள்ளி)

(ஆ) (i) மேல் வரும் ABCD ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - தாதுசேன மன்னனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றியவன்.

B – கி.பி. 1302 இல் குருநாகல் மன்னனாக முடிசூடிக்கொண்டவன்

C – கி.பி. 1803 இல் கண்டி இராச்சியத்தை பிரித்தானியர் தாக்கிய போது கண்டி ஆட்சியாளன்

D –ஆயதபலத்தால் ஐந்து வருடங்களில் பெற்றவற்றைப் பாதுகாக்க 50 வருடங்கள் ஆயுதம் தரித்த நிலையில் இருக்க வேண்டிவரும் எனக்கூறிய ஜேர்மனிய சேனாதிபதி (04 புள்ளிகள்)

- A,B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலங்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. A யினால் காட்டப்பட்ட நிர்மாணிப்பின் பெயர் என்ன?
2. இது அமைக்கப்பட்ட காலத்தில் ஆட்சி செய்த மன்னன் யார்?
3. இது அமைந்துள்ள மாவட்டம் எது?
4. இதன் வாயிலில் அமைந்தள்ள உருவம் யாது?
(4 புள்ளி)



**A**

(iii) 1. B யினால் காட்டப்படும் படத்தினைப் பெயரிடுக?
2. மேற்படி படத்துடன் தொடர்புடைய புரட்சி எது?
3. இது காணப்படும் நாடு எது?
4. புரட்சியின் அடிப்படைக் கோசங்களில் ஒன்றினைத் தருக?

(4 புள்ளி)



**B**

## பகுதி - II

02) (i) வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் வாழ்ந்ததற்கான ஆதாரம் கிடைத்தமைக்கான அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட கரையோர ஈரவலய இடங்கள் மூன்று தருக. (3 புள்ளி)

(ii) இலங்கையில் 125000 ஆண்டிலிருந்து கி. மு. 1800 வரையிலான காலப்பகுதியில் கற்கால மனிதன் வாழ்ந்த இடங்கள் நான்கு தருக. (4 புள்ளி)

(iii) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதன் பெற்றிருந்த தொழில்நுட்ப அறிவை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதனின் வாழ்க்கை முறையை மூன்று காரணிகளின் உதவியுடன் விளக்குக. (6 புள்ளி)

03) (i) கல்வெட்டுக்களில் பயன்படுத்திய அரச கோட்பாடு தொடர்பான எண்ணக்கருக்கள் மூன்று தருக. (3 புள்ளி)

(ii) மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடைய கீழ்வரும் பணிகளுக்குப் பொறுப்பானவர்களின் பதவிப் பெயர்களை A, B, C, D ஒழுங்குமுறையில் எழுதுக.

A - அமைச்சர்கள்

B - குதிரைப் பிரிவின் தலைவர்

C - காசு அச்சிடும் பிரிவின் தலைவர்

D - நாட்டியப் பிரிவின் தலைவர் (4 புள்ளி)

(iii) தேவநம்பியதிஸ்ஸ மன்னன் காலத்தில் அரசியல் அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருந்தமைக்கான சான்றாதாரங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) கமிக வின் பணிகள் மூன்றினைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளி)

04) (i) A, B, C எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் மன்னர்கள் நட்புறவுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்த நாடுகளை அதே ஒழுங்குமுறையில் தருக.

A - 1ம் கஜபாகு

B - கனிஸ்டதிஸ்ஸன்

C - 6ம் அக்போ (3 புள்ளி)

(ii) 1ம் விஜயபாகு மன்னனின்

A - திருமணத் தொடர்பு

B - அயல் நாட்டு பிரஜைகளுடன் நட்புறவுடன் செயற்பட்டமை

ஆகிய கூற்றுக்களுக்கு ஆதாரமான விடயங்களைத் தருக. (4 புள்ளி)

(iii) புராதன காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) சொரபொரவாவி தூண் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள ஹோபிட்டிகம சந்தை நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

05) (i) மேல்வரும் A, B, C ஆகிய கூற்றுக்கள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுடன் தொடர்புடையவர்களை ஒழுங்கு முறையில் தருக.

A - காலியில் மும்மொழிக் கல்வெட்டைப் பொறிப்பித்தமை

B - ஸ்ரீ ஜயவர்த்தனபுரவில் கோட்டை கட்டியமை

C - கம்பளைக் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த அரேபிய தேசசஞ்சாரி (3 புள்ளி)

(ii) உலர்வலய நீர்வள நாகரிகம் வீழ்ச்சியடைந்த பின்னர் ஈரவலயம் நோக்கிப் புலம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கிய சவால்கள் இரண்டு தருக. (4 புள்ளி)

(iii) 1 ஆம் புவனேகபாகு மன்னன் எதிர்கொண்ட சவால்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) இரண்டாம் நகராக்க காலத்தின் கட்டட நிர்மாணங்கள் தொடர்பாக மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

06) (i) A - பத்வடன நிலமே

B - கடுபுள்ளே

C - தியவன நிலமே

ஆகியோரின் பொறுப்புக்களை A, B, C என்ற ஒழுங்குமுறையில் தருக. (3 புள்ளி)

(ii) A - பிரதம பிரதானி

B - இரண்டாவது பிரதானி

இவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்களை அதே ஒழுங்கில் தருக. (4 புள்ளி)

(iii) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்காக மேற்கொண்ட பணிகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) கண்டி இராச்சியத்தின் பொருளாதார நடவடிக்கைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

07) (i) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது இலங்கையில் இருந்த இராசதானிகள் மூன்று தருக. (3 புள்ளி)

(ii) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்தமைக்கான நோக்கங்கள் இரண்டு தருக. (4 புள்ளி)

(iii) 7 ஆம் புவனேகபாகு போர்த்துக்கேயரின் உதவியை நாடியமைக்கான இரு காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

(iv) கண்டி இராச்சியத்தில் போர்த்துக்கேயர் தமது அதிகாரத்தினை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சிகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

## பகுதி - III

08) (i) பிரான்சில் குடிமக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த மூன்று வரிகளையும் தருக? (3 புள்ளி)

(ii) சமவுடமைக் கொள்கையை பின்பற்றும் நாடுகள் நான்கு தருக. (4 புள்ளி)

(iii) கைத்தொழில் புரட்சி இலங்கையில் ஏற்படுத்திய தாக்கங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) அமெரிக்கக் குடியேற்றங்களில் பிரித்தானியரது நிர்வாக முறைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. (6 புள்ளி)

09) (i) இரண்டாம் உலக யுத்தத்தில் ஈடுபட்ட

A - நேச அணி நாடுகள் இரண்டும்

B - அச்சு அணி நாடு ஒன்றும் தருக. (3 புள்ளி)

(ii) 2ஆம் உலக யுத்தக் காலத்துடன் தொடர்புடைய நபர்களின் பெயர்கள் A, B, C, D என்ற ஒழுங்கில் தரப்பட்டுள்ளது. அவர்களுடைய நாடுகளைத் தருக.

A - வின்சன்ட் சேர்ச்சில்

B - பிராங்கிளின் ரூஸ்வேல்ட்

C - பொனிடோ முசோலினி

D - ஸ்டாலின் (4 புள்ளி)

(iii) 2ஆம் உலக யுத்த காலத்தில் ரஷ்யாவை ஆக்கிரமித்த ஜேர்மனியப் படைகளைத் தோற்கடிக்க, ரஷ்யா மேற்கொண்ட தந்திரோபாய நடவடிக்கைகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு எடுத்த மோதலில்லாமல் தீர்வு கண்ட முயற்சிகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)



